# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 6 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 7**
**JULY 2022 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**



Mob.: No. **9894261333**
0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com




கர்த்தருக்குள் அன்பான வாசகர்களே.

வாழ்த்துகிறேன்.

கர்த்தரின் கிருபை என்னையும், வாசகர்களாகிய உங்கள் எல்லாரையும் கிருபையாக நடத்துவதை நினைத்து தேவனை துதிக்கிறேன்.

உங்கள் அன்புக்கு நன்றி. உங்கள் காணிக்கைக்கு நன்றி..

கர்த்தரின பெரும் கிருபையால் டிரைபல் மிஷன் ஊழியம் பெரிய அளவில் கர்த்தரின கிருபையாலும் Dr. முரளிதர் அவர்களின் பெரும் முயற்சியினாலும் மிகச் சிறப்பாக முன்னேறி வருகிறது. **Dr. முரளி** அவர்களின் சரீரத்தில் உள்ள மாறாத சர்க்கரை வியாதியும், இரண்டு கால்களின் வீக்கமும் கொரோனாவின் தாக்கம் துரையீரலை பலவீனபடுத்தியிருந்தாலும் அவைகளையும் சுமந்தவாரே உடன் டாக்டர்களின் ஆலோசனைகளையும் கேட்காமல் மறுபடியும் நீண்ட பிராயனங்களை தொடங்கிவிட்டார். எட்டு அல்லது பத்து மணிநேர நீண்ட பயனம் செய்து ஆனைக்கட்டியிலிருந்து - வயநாடு மலை பகுதிகளும், டிரைபல் மிஷன் தலைமை அலுவலகமான **பெரும்பாவூர்** பகுதிக்கும்



Dr. **Muralidar,** M.D.

போய் வருவது சாதாரண விஷயம் அல்ல. அவர் உள்ளத்தின் ஊழிய பாரம். மிஷனரி ஊழிய பகுதிகளை சந்திக்கும் பொறுப்பு இவைகள்தான் அவரை துணிகர பயனத்தை மேற்கொள்ள வைக்கிறது.

அதே சமயம் அவரின் முயற்சியின் பயனால் டிரைபல் மிஷன் அதிவாசிகளுக்காக அட்டப்பாடியில் ஆரம்பிக்கப்பட்ட பெத்தானி மெட்ரிகுலேசன் பள்ளி நாடே புகழும் வண்ணம் உயர்த்தியிருக்கிறார்.

படத்தில் காணும் ஆதிவாசி பிள்ளைகளின் பள்ளியில் பிள்ளைகளின் படிப்பு சுமார் கடந்த ஆறு வருடங்களாக 10ம் வகுப்பு தேர்வில் 100% மாணவர்கள் பாஸ் செய்து அனைத்து பள்ளிகளிலும் முன்னிலை வகிக்கிறார்கள். இதற்கு Dr. முரளிதர் அவர்கள் மட்டும் காரணம் அல்ல. அந்த பள்ளியை தியாகத்தோடு பொறுப்பேற்று 100%SSLC-2022 1st Class மார்க்கும் வாங்கச்செய்து மாவட்டத்திலேயே சிறந்த பள்ளி என்று பெயர் வாங்கிகொடுக்குமளவு பிள்ளைகளின் படிப்பில் சிறப்பான கவனம் செலுத்திய தலைமை ஆசிரியை Mrs. Grace Koshy அவர்களையே சாரும். அவர்களுக்கு உறுதுணையாக நின்ற Mr. Koshy அவர்களையும் பாராட்டாமல் இருக்க முடியாது.




மேலும் **வயநாடு** என்ற காட்டு பகுதியில் Dr. முரளி அவர்கள் ஒரு **ஆஸ்பத்திரியை** மிஷனரி ஆலயத்தின் அருகே பினுது இன்று 3 சிறந்த டாக்டர்கள் பணி புரியும் அளவு வளர்ந்துள்ளது. காட்டுக்குள் இருந்து ஆதிவாசிகள் திரளாக வர தொடங்கிவிட்டனர். ஆராதனைக்கும் மக்கள் திரளாக வர தொடங்கிவிட்டனர். அதோடு குடிகாரர்களுக்கு குடியிருந்து விடுதலை பெற Rehabitation Centre ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பலர் அதன் மூலம் குடியிவிருந்து விடிதலை பெற்றுள்ளனர். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

உங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

\- Dr. **புஷ்பராஜ்**

---

Dr. முரளி அவர்களோடு தொடர்பு கொள்ள

drmuralidaranaikatty@gmail.com கைபேசி 9443165080

# வேதத்தின் வாக்குதத்த வசனங்களை நமக்கு சொந்தமாக்கிக் கொள்வது எப்படி?

ஒவ்வொரு புது வருடமும் குறிப்பிட்ட ஊழியர்கள், பாஸ்டர்கள் யாவரும் **கர்த்தர் சொல்ல சொன்னார்** என்று கூறி **இந்த வருட வாக்குத்தத்தம்** என்று ஒரு வசனத்தை கூறுவார்கள், அதை **பைபிள்மார்க்காகஃ** (அடையாளம்) **அட்டையில்** அச்சடித்து **சபை மக்களுக்கு** அல்லது சில ஊழியர்கள் தங்கள் ஊழியத்தை தாங்குகிறவர்களுக்கு கொடுப்பார்கள். இந்த **வசன அட்டைக்காக** ஆவலோடு காத்திருப்பவர்கள் ஏராளம்.

**கிறிஸ்தவ பத்திரிக்கை** நடத்துபவர்களும் புதிய வருட வாக்குதத்த வசனத்தை **முதல் பக்கத்தில்** பெரிய எழுத்தில் இவ்வருட வாக்குதத்தம் என்று எழுதி வெளியிடுவார்கள். இந்த வசனத்தைத்தான் கர்த்தர் உங்களுக்கு சொல்ல சொன்னார் என்றும் பொய்யாய் அறிவிப்பார்கள்.

வேதத்தில் உள்ள **வாக்குத்தத்தம் வசனம் எல்லாமே மனம்திருப்பின** உண்மை கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்டதாகும். அந்த வசனங்கள் **இப்போதுள்ள நமக்கும் நம் சந்ததிக்கும் பொருந்தும்** அதனால்தான்..... அவைகள் யாவும் **நமக்காகவும் எழுதப்பட்டுள்ளது** என்று வசனம் கூறுகிறது.

அந்த வாக்குத்தத்தவசனங்கள் நமக்காக எழுதப்பட்டதானால் அதை நாம் **சுதந்தரித்துக் கொள்வது எப்படி?** உதாரணமாக **உங்கள் தூக்கம் சந்தோஷமாக மாறும்** என்ற வசனத்தை ஒரு அட்டையில் அச்சடித்து உங்கள் கையில் கொடுத்துவிடுகிறார்கள். உடனே நீங்கள் **இந்த வருடம்** என் துக்கமெல்லாம் சந்தோஷமாக மாறப்போகிறது என்று அந்த வசனம் அச்சடித்த **கார்டையே பார்த்து** கொண்டிருந்தால் **உங்கள் துக்கம் சந்தோஷமா**க மாறிவிடுமா? நிச்சயமாக மாறாது! உங்கள் வாழ்க்கையில் நீங்கள் **வசனத்துக்கு கீழ்படிந்து** சாட்சியாக வாழ்ந்தால்தான் **கிறிஸ்து சந்தோஷப்படுவார்.** அப்போதுதான் **உங்கள் துக்கத்தை சந்தோஷமாக** மாற்றுவார், வசனத்துக்கு கீழ்படியாமல், **மற்றவர்களோடு ஒப்புரவாகாமல்** பகைமை உணர்ச்சியை மனதிலேயே வைத்துக் கொண்டிருந்தால் **உங்கள் துக்கம் அதிகமாகும்**. சந்தோஷம் வரவே வராது. அந்த வசன அட்டையை வேத புஸ்தகத்தில் வைத்துக்கொண்டிருப்பது வேஸ்ட்.

☐ சபையில் ஒரு நல்ல விசுவாசகர் ஒருவருக்கு **ஈசாக்கு வரவர விருத்தியடைந்தான் நூறு மடங்கு பலன் அடைந்தான்** என்ற வசனம் வாக்குத்தத்த வசனமாக புதுவருட உபவாச

கூட்டத்தில் இவருக்கு **வாக்குத்தத்த வசன** அட்டையாக கையில் கொடுத்தார்கள். இவருக்கு மிகவும் சந்தோஷம். நல்ல வசனம் கிடைத்துவிட்டது, இனி என் **வியாபாரம் செழிக்கும்** என்று சந்தோஷப்பட்டார். ஆனால் நடந்தது என்ன? அவர் கடன் மேல் கடன் அடைந்து தன் வீட்டை மட்டும் விற்காமல் மற்ற தன்னுடைய **சொத்துகளையெல்லாம்** விற்று **வட்டியை மட்டுமே** கட்டி முடித்தார். ஆனால் கடன் தொகை அப்படியேயிருந்தது. அவர் என்னிடம் வந்து **எனக்கு ஏன் இப்படி தோல்வியும்** வறுமையும் ஏற்பட்டது. அப்படியானால் இந்த புது வருடம் **எனக்கு கொடுக்கப்பட்ட வாக்குதத்தம் பொய்யா?** இனி எப்படி ஜீவிப்பேன்?. **தற்கொலை** செய்து கொள்ளலாம் போல் இருக்கிறது என்றார்.

நான் அவரை உட்கார வைத்து சகோதரனே ! உங்களுக்கு அச்சடித்து கொடுக்கப்பட்ட கார்டை எடுத்து வாசித்து அதில் உள்ள அந்த **வசனத்தை** வேதத்தில் எங்கு இருக்கிறது என்று கண்டுபிடியுங்கள். அந்த வசனம் **சொல்லப்பட்ட சூழ்நிலையையும்** சம்பவத்தையும் **தியானியுங்கள்,** அந்த வசனத்தில் அர்த்தம் அப்போது உங்களுக்கு புரியும் என்று கூறி ஜெபித்து அனுப்பினேன். அந்த நபர் என்னிடம் திரும்பி வந்தார் அவருக்கு அந்த வசனத்தின் விவரங்களை விளக்கினேன்.

வேதத்தில் அந்த குறிப்பிட்ட வசனம் ஆதி, 26:12,13ல் காணப்படுகிறது. நடந்த சம்பவத்தை நாம் தியானிக்கும் போதுதான் வாசகர்களாகிய உங்களுக்கும் இதன் விவரம் அறியவரும்.

## வாக்குத்தத்த அந்த குறிப்பிட்ட வசனங்களை கவனியுங்கள்

**ஈசாக்கு அந்த தேசத்தில்** விதை விதைத்தான், **கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால்** அந்த **வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான்.** அவன் ஐசுவரியவனாகி **வரவர விருத்தியடைந்தான் மகா பெரியவனானான்**. ஆதி 26:12,13. ஈசாக்கு இந்த அளவு ஆசீர்வதிக்கப்பட காரணமென்ன என்பதை அறிந்தால் இந்த வாக்குத்தத்த வசன மூலம் நீங்களும் ஆசீர்வதிக்கப்படலாம்.

**ஆபிரகாம்** வாழ்ந்த காலத்தில் அவன் வாழ்ந்த அந்த தேசத்தில் **கடும் பஞ்சம்** உண்டானது. அந்த பஞ்ஜத்துக்கு பின் அனேக காலம் கடந்தபின் ஆபிரகாமின் மகன் **ஈசாக்கின் நாட்களிலும்** அதே மாதிரி **பஞ்ஜம்** உண்டானது. இந்த அதிகாரத்தின் முதல் வசனத்தில் **ஆபிரகாம்** காலத்து **பஞ்ஜத்தை** ஈசாக்கின் காலத்தில் ஏற்பட்ட பஞ்ஜத்தின் சமயத்தில் **ஆவியானவர்** ஏன் சுட்டிக் காண்பிக்கிறார்?

காரணம் **பஞ்ஜம்** உண்டானபோது **ஈசாக்கின் தகப்பன்** செயல்பட்ட விதமும் அவன் மகன் **ஈசாக்கு** செயல்பட்ட விதத்தையும் குறிப்பிட்டு **பின் சந்ததிகள்** தங்களுக்கு இவற்றை பாடமாக எடுத்து தங்கள் **ஆண்டவரின் மனதை துக்கப்படுத்தி** விடாதபடி இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் **ஆபிரகாமின்** கால பஞ்ஜத்தை ஞாபகப்படுத்துகிறார் என்று நான் கருதுகிறேன்.

☐ **ஆபிரகாம் ஆரம்ப காலத்தில் செய்த தவரும் - பஞ்சக்காலத்தில் ஆபிரகாம் செய்த தவறும்**

**விசுவாசிகளின்** தகப்பன் என்று பெயர் பெற்ற **ஆபிரகாமை** கர்த்தர் தன் திட்டத்துக்காக தெரிந்துகொண்டார். **விக்கிரகத்தை** ஆராதித்த கூட்டத்திலிருந்தவனும், பெரிய செல்வந்தனாக வாழ்ந்துகொண்டிருந்தவனுமான **ஆபிரகாமுக்கு** மட்டும கர்த்தர் தன்னை வெளிப்படுத்தி ஆபிரகாமை **அந்த கூட்டத்திலிருந்து** பிரித்தெடுத்து ஆபிரகாம் மூலம் தனக்கு **பிரியமான ஆவிக்குரிய சந்ததியை** உருவாக்க கர்த்தர் சித்தம் கொண்டார். **ஊர்** என்ற இடத்தில் வாழ்ந்த **ஆபிரகாம்** ஒரு நாள் **கர்த்தருடைய வார்த்தை** உண்டாகி **ஆபிரகாமே! நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் உன் தகப்பனுடைய வீட்டையும்விட்டு நான் உனக்கு காண்பிக்கும் தேசத்துக்கு போ ! நான் உன்னை பெரிய ஜாதியாக்குவேன். உன்னை ஆசீர்வதித்து உன் பெயரை பெருமைபடுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை நான் ஆசீர்வதிப்பேன். உன்னை சபிக்கிறவர்களை நானும் சபிப்பேன். பூமியில் உள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்** என்றார். ஆதி 12:1-3.

கர்த்தர் **ஆபிரகாமுக்கு** சொன்னபடியே அவன் புறப்பட்டு போனான். வழியில் சில தேசத்தை கடந்து பிரயானம் பண்ணிக்கொண்டு போனான். அச்சமயத்தில் ஆபிரகாம் இளைப்பார சில நாள் தங்கின அந்த குறிப்பிட்ட தேசத்தில் **கொடிய பஞ்ஜம்** உண்டாக்கியிருக்கிறது. வர வர பஞ்ஜம் கொடியதானபோது **ஆபிரகாம்** தன் இச்சையாக ஆண்டவரிடம் கேட்காமல் **எகிப்து தேசத்துக்கு** போய் பிழைத்துக்கொள்ளலாம் என்று எகிப்துக்கு வந்து சேர்ந்தான். இங்கு தான் ஆபிரகாம் **ஆண்டவரின் கோபத்துக்குள்ளானான்.** ஆண்டவர் கட்டளையிடாமல் விக்கிரகம் நிறைந்த எகிப்து தேசம் சென்றது ஆண்டவருக்கு பிடிக்கவில்லை.

☐ மேலும் எந்த **பஞ்சக் காலத்திலும்** பஞ்ஜம் **உண்டான தேசத்திலேயே** நம் தெய்வம் நம்மை போஷிக்கிறவர், நாடே பஞ்சத்தில் தவித்தபோது **எலியாவை** காகத்தை கொண்டு போஷித்தார். பங்ஜ காலத்தில் **விதவையின்** மாவும் - என்னையும் எடுக்க எடுக்க **குறையாமல் பாதுகாத்தவர்.** அப்படியிருக்க **விசுவாசிகளின் தகப்பன்** என்று பெயர் பெற்றவன். **கஷ்ட** காலத்தில் **தடுமாறி** போனான். அதனால் ஆபிரகாம்பல சோதனைகளுக்கு உட்பட்டான். **எகிப்தில்** தன் மனைவி சாராள் காரணமாய் **பொய் சொல்ல** வேண்டிவந்தது. மேலும் ஆபிரகாம் புறப்பட்ட போதே செய்த பெரிய தவறு என்னவென்றால் கர்த்தர் **ஆபிரகாமை மட்டும் தான்** சொந்த ஊரைவிட்டு **ஜனத்தைவிட்டு இனத்தைவிட்டு,** புறப்பட சொன்னார். ஆனால் அவன் தன் சகோரதனின் மகன் லோத்தையும் குடும்பத்தையும்

அவனோடு அவன் தன் **இனத்தாரையும்** கூட கூட்டிக்கொண்டு போனான். இது மகா பெரிய தவறு.

**எகிப்துக்கு** சென்ற ஆபிரகாம் எகிப்திலிருந்து அங்கு பல சோதனையில் அகப்பட்டு மனம் திரும்பி திரும்ப பங்ஜம் ஏற்பட்ட பழைய இடத்துக்கே வந்து தான் முன்பு கர்த்தருக்கு பலி செலுத்தின இடத்திலேயே குடியிருக்க ஆரம்பித்தான். அதன் பின் அங்கு அவனுக்கு **சொத்துக்கள்** பெரிதானது, **செல்வந்தனாக** வாழ்ந்தான் எல்லாரை காட்டிலும் பெரும் **பணக்காரனாகவும்** வாழ்ந்தான்.

ஆனால் கூட வந்த அண்ணன் மகன் **லோத்தாலும்** அவன் **வேலைக்காரர்களாலும்** பிரச்சனை வந்தது. அப்போது ஆபிரகாம் லோத்துடன் சமாதானமாக பேசி இருவரும் பிரிந்தனர்.

அந்தசம்பவங்களுக்குபின் ஆபிரகாம் **மம்ரே** என்னும் சமவெளி பிரதேசத்தில் குடியிருந்தான். கர்த்தர் ஆபிரகாமை மேலும் ஆசீர்வதித்தார் அதன்பின் தான் ஆண்டவர் சித்தத்தின்படி வாழ்ந்தான்.

சொல்லப்போனால் கர்த்தர் தான் ஆபிரகாமையும் லோத்தையும் பிர்த்தார் என்று கூறலாம். **கர்த்தரின் அழைப்பு ஆபிரகாமுக்கு மட்டும்தான்.** அதன்படி **ஆபிரகாம்** கர்த்தர் கூறியபடி தன் **வீடு சொத்து** தன் இனத்தார் யாவரையும் விட்டுவிட்டுதான் புறப்பட்டான். ஆனால் ஆபிகாம் தன் **சகோதரனையும்** குடும்பத்தினரையும் **இனத்தாரையும்** தன்னுடன் அழைத்து வந்ததால்தான் பிரச்சனைகள் உருவானது.

எல்லா காரியத்திலும் ஆபிரகாம் கர்த்தரை கேட்டு செய்பவன் ஆனால் **பஞ்சம்** வந்தபோதுதான் பயந்துபோய் கர்த்தருக்கு பிடிக்காத **எகிப்து** தேசத்துக்கு சென்று குடியிருந்தான். இப்படி பல விஷயத்தில் **ஆண்டவரை கேட்காமல் செய்ததா**ல் ஆபிரகாம் பல **பிரச்சனைகளுக்கு** உள்ளாளான். பிரச்சனைகளால் ஆபிரகாம் உணர்த்தப்பட்டபின் திருந்தினான். அதனால் கர்த்தர் **அவனை மன்னித்து** மறுவாழ்வு கொடுத்து புதிய சந்ததியையும் உண்டாக்கினார்.

☐ **ஆபிரகாமின்** மகன் **ஈசாக்கின்** வாழ்க்கையிலும் இதே போன்ற பிரச்சனை உண்டானது. **ஈசாக்கு** வாழ்ந்த இடத்திலும் **கடும் பஞ்சம்** உண்டானது. இப்போது கர்த்தர் முந்திக்கொண்டு ஈசாக்கின் தகப்பன் ஆபிரகாம் செய்த தவறை செய்யாமல் இருக்க **பஞ்சத்தின்** சமயத்தில் **ஈசாக்குக்கு** கர்த்தர் தரிசனமாகி முன்னெச்சரிக்கையாக **நீ எகிப்துக்கு போகாமல்** நான் உனக்கு சொல்லும் வரை இந்த பஞ்ஜம் உண்டான தேசத்திலேயே குடியிரு என்றார். அப்படியே பெலிஸ்தருடைய தேசத்திலேயே குடியிருந்து ஆண்டவர் வார்த்தைக்கு **பஞ்ஜத்தின் நாட்களில்** கீழ்படிந்தான். **பஞ்ஜத்தின்** நாட்களிலும் வரட்சியான சூழ்நிலையிலும் **அவன்**

**வரட்சியான நிலத்தில் துனிந்து விதை விதைத்தான்** கர்த்தர் **அவனை ஆசீர்வதித்ததினால்** அந்த வருடம் அதே வரண்ட நிலத்தில் பயிரிட்டதில் **நூறு மடங்கு** பலன் அடைந்தான். அதனால் அவன் **மேலும் மேலும் விருத்தியடைந்தான்.**

**இதே வசனத்தை** வாக்குத்தத்த அட்டையில் பெற்ற கிறிஸ்தவ நண்பர்கள் இந்த வாக்குதத்தை சொந்தமாக்கிக்கொள்ளவும் ஈசாக்கை போலவே **உங்கள் வருமானத்தில், வியாபாரத்தில்** நூறுமடங்கு ஆசீர்வாதம் பெறவும் **ஈசாக்கை** போல ஆண்டவருடைய **வசனத்துக்கு** கீழ்படிய வேண்டும். வெரும் வசன அட்டையை பைபிளில் வைத்தாலும் **பாக்கெட்டில்** வைத்தாலும் **வீட்டில் ஒட்டி** வைத்தாலும். உங்கள் வாழ்விலும், வீட்டிலும் ஒரு மாற்றமும் வராது. **கடன் வாங்கி கொண்டேயிருக்**க வேண்டியதுதான். ஈசாக்கை போல விருத்தியடைய முடியாது.

நீங்கள் வரட்சியான வருமானமில்லாத இடத்தில குடியிருந்தாலும் **அதே இடத்தில் உங்களை** செழிப்பாக்கி உங்களை **ஆசீர்வதிக்க** முடியும்,

☐ உதாரணமாக என் நண்பர் ஒருவருக்கு நடந்த சம்பவத்தை இங்கு குறிப்பிடுவது நல்லது என்று நினைக்கிறேன். அந்த நன்பர் **லஞ்ஜம்** வங்காதவர். அவருடைய மேல் அதிகாரியும், மந்திரியும் ஒரு நபரை குறிப்பிட்டு அவருக்கு அரசாங்க **கான்ட்ராக்டை** கொடுக்க சொன்னார்கள். ஆனால் அவர்கள் குறிப்பிட்ட நபர்மேல் ஏராளமான குற்றச்சாட்டுகள் உண்டு. மேலும் அந்த குறிப்பிட்ட **பிராஜக்டை** செயல்படுத்த **பழக்கம் இல்லாதவர்.** ஆகவே அவர் மனுவை நிராகரித்தார். வேறு **தகுதியான நபருக்கு** அந்த கான்ட்ராக்டை கொடுத்துவிட்டார். அதன் விளைவு **மந்திரிக்கு,** MLA வுக்கு **கட்சி செயலருக்கு** கிடைக்க வேண்டிய பெரிய கமிஷன் தொகை கமிஷன் கிடைக்காமல் போனாது. அதனால் மூன்று வாரத்தில் அந்த குறிப்பிட்ட ஆபீஸருக்கு **இடம் மாற்றம்** செய்துவிட்டனர்.

தமிழ்நாட்டில் ஒரு அதிகாரி தவறு செய்தால் **உன்னை தண்ணீரில்லாத** ஊருக்கு இடம் மாற்றம் செய்வேன் என்று பயமுறுத்துவார்கள். அப்படிப்பட்ட இடம்தான் தமிழ்நாட்டில் **இராமநாதபுரம்** என்ற ஊர். அந்த ஊரை **தண்டிக்கப்பட்டவர்களை** அனுப்பும் ஊர் என்று அழைப்பார்கள். நான் குறிப்பிட்ட நண்பர் இந்த குறிப்பட்ட ஊர் சென்று பதவியைஏற்றுக்கொண்டார். இவர் **லஞ்ஜம்** வாங்காமல் **உரியவர்களுக்கும், தகுதியானவர்களுக்கும்** அரசாங்க உதவிகளை செய்து தந்தார். ஊர் முழுவதும் அந்த அதிகாரியை குறித்தே பேச்சு. தொல்லையில்லாமல் ஜெபிக்க அந்த ஊரும். சூழ்நிலையும் அவருக்கு சந்தோஷத்தை கொடுத்தது. மேல் அதிகாரிகளின் பிரச்சனை இல்லாமல் இருந்தது. அதன்பின் புது அரசியல்கட்சி **எலக்ஷனில் ஜெயித்து** பதவி ஏற்றது. உடனே **தண்ணீர் பஞ்ஜம** உள்ள அந்த ஊருக்கு **நல்ல தண்ணீர்** கிடைக்க பெருத்த செலவில்

ஏற்பாடுசெய்யப்பட்டது. இப்போது தண்ணீர் விலை கொடுத்து வாங்க வேண்டியதில்லை. ஒவ்வொரு வீட்டிலும் தண்ணீர் பைப் போடப்பட்டது.

¶ Í > » ö_ Ök ò Âz **செலவு** ஏதும் இல்லாததால் **சம்பள பணம்** சேமிக்க முடிந்தது. பிள்ளைகளுக்கு நல்ல உயர்ந்த வேலை கிடைத்தது. இப்போது இவர் குடும்பம் மிகுந்த சந்தோஷமாக சமாதானமாக வாழ்ந்து **வீட்டில் ஜெப கூட்டம்** தொடங்கினர். ஏராளமானவர்கள் கூடினார்கள், இவர் நிலை உயர்ந்தது. **பதவி உயர்வு பெற்று** மதுரைக்கு இடமாற்றம் கிடைத்தது. நீங்கள் என்னை **அழிக்க நினைத்தீர்கள்**. ஆனால் **என் ஆண்டவரோ** என்னை உங்கள் கண்கள் பார்க்க **மிக உயரத்தில்** உயர்த்தி ஆசீர்வதித்தார் என்ற வசவனத்தின்படி கர்த்தர் அவரை ஆசீர்வதித்தார். தண்டிக்கப்பட்டவர்களை அனுப்பும் ஊர் என்று பெயர் எடுத்த அதே ஊரில்தான் இந்த சகோதரன் சாட்சியுள்ள கிறிஸ்தவ ஜீவியம் செய்ததால் அதே ஊரை இவர்னிமத்தமாய் **ஆசீர்வதிக்கப்பட்ட** ஊராக கர்த்தர் மாற்றினார்.

ஆகவே அருமையானவர்களே! நீங்கள் கர்த்தரின் கீழ்படிந்து சத்துருக்களை குறித்து கவலைப்படாமல் இருந்து உங்கள் சாட்சியின் ஜீவியத்தை மக்கள் கண்டு கர்த்தரை மகிமைப்படுத்துவார்கள். ஈசாக்கு பஞ்ஜத்தின் சூழ்நிலையிலும் **கர்த்தருக்க பிடிக்காத செழிப்புள்ள தேசத்தை** நோக்கி தன் தகப்பனைப்போல் **எகிப்துக்கு** ஓடாமல் **பஞ்ஜம் உள்ள தேசத்திலே** தங்கி என் தெய்வம் என்னையும் என குடும்பத்தையும் **பட்டினி போடாமல்** அதே தேசத்தில் என் நிலத்தையும் ஆசீரர்வதித்து **நூறு மடங்கு** பெருக செய்வார் என்பதை விசுவாசத்தத்தின் அடிப்படையில் ஆசீர்வதிக்கபட்டார்.

இதை வாசிக்கிறவர்கள் சோர்ந்து போகாதீர்கள். உங்கள் **மேல் அதிகாரி** உங்ளை வெறுத்தாலும் சோர்ந்து போக வேண்டாம். **அந்த அதிகாரியே** உங்களை நேசிக்க வைக்க கர்த்தரால் அவரை மாற்ற இயலும். ஈசாக்கின் வாழ்க்கை உங்களுக்கு பாடமாக இருக்கட்டும்.

உங்களை நீங்கள் தற்பரிசோதனை செய்து எந்தெந்த வசனத்துக்கு கீழ்படியவில்லை என்று ஆராய்ந்து பாருங்கள். ஒப்புரவு ஆக வேண்டியவர்களிடம் ஒப்புரவு ஆகவேண்டும். வீட்டிலும் வெளியிலும் யாரிடமும் **பொய்** சொல்லாதீர்கள். இப்படி ஒவ்வொரு வசனத்துக்கும் கீழ்படிந்தால் கர்த்தருக்கு உங்கள்மேல் அன்பு உண்டாகும்.

☐ இன்று ஏராளமான கிறிஸ்தவ சகோதரர்கள் **சுதந்திர ஊழியம்** என்றும் **சொந்த சபை** நடத்துகிறேன் என்றும் கூறி **பயங்கர வறுமையில்** வாழ்வதை காண்கிறேன். மேலும் **காணிக்கைக்காக** துணிகரமான **பொய் சாட்சிகளை** கூறி கிறிஸ்தவர்களை ஏமாற்றுகிறார்கள்.

பல ஊழியர்கள் **வீட்டு வாடகை** கட்ட முடியவில்லை, பிள்ளைகளை **படிக்க** வைக்க பணம் இல்லை, **மனைவிக்கு ஆப்பரேசன் செய்ய பணம் இல்லை, மருந்து வாங்க** பணம் இல்லை. ஏதாவது **பண உதவி செய்யுங்கள்** என்று கெஞ்சுகிறார்கள். அச்சடித்த துண்டு

பிரதிகளை அல்லது கடிதம் போன்று ஒன்றை **அச்சடிக்கப்பட்ட** விண்ணப்பங்களாக பல ஸ்தாபனங்களுக்கும். பணக்கார விசுவாசிகளுக்கும் அனுப்புகிறார்கள். இவர்களை காணும்போது ஒரு பக்கம் **மண வேதனையாக** இருக்கிறது. மற்றொரு பக்கம் **கோபம்** உண்டாகிறது. இதனால் கர்த்தரின் நாமம் தூஷிக்கப்படுகிறதை அவர்கள் உணறுவதில்ல.

சில சமயம் அப்படிப்பட்டவர்கள் நேரில் என்னை சந்திக்கும்போது நான் அவர்களை குறித்து நன்றாக விசாரித்துவிட்டு **உங்களை யார் ஊழியத்துக்கு வர சொன்னது**.? உங்கள் **இரட்சிப்பே** சரியில்லையே. எப்படி மற்றவர்களுக்கு இரட்சிப்பை குறித்தும், **மனம்திரும்புதலை** குறித்தும் சொல்வீர்கள் என்றேன். உடனே அவர்கள் நான் ஜெபம் செய்து நிறைய பேர்க்கு **பிசாசுகளை ஓட்டியிருக்கிறேன்.** அப்படியே நான் சொன்ன **தீர்க்கதரிசனம்** அவர்களக்கு பலித்திருக்கிறது என்பார்கள். உடனே நான் அதனால் அந்த ஆத்துமாவுக்கு என் லாபம் என்றேன். தம்பி நீங்கள் உண்மையான ஊழியர் அல்ல என்று வெளிப்படையாகவே கூறிவிடுவேன் நங்கள் கிறிஸ்தவ வீடுகளுக்கு சென்று ஜெபம் செய்து **பிச்சையாக காணிக்கை** வாங்குகிறீர்கள். அது **ஏமாற்று ஊழியம்**, இனி நீங்கள் ஊழியம் செய்ய வேண்டாம். இனி நீங்கள் **பில்லி சூன்யம், பிசாசு ஓட்டுதல்** இப்படிப்பட்ட மந்திரவாதிகளைப்போல் காரியங்களை செய்யாமல் முதலில் நீங்கள் **படித்த படிப்புக்கு** ஏற்ற வேலையை தேடுங்கள். **வேலை கிடைக்காவிட்டால்** கூலி **வேலையாவது** செய்து **உங்கள் குடும்பத்தை** காப்பாற்றுங்கள். நீங்கள் சொந்தமாய் **பணம் சம்பாதித்து** உங்கள மனைவி, பிள்ளைகளை காப்பாற்றாவிட்டால், **உங்கள் வீட்டில்** யாரும் **உங்களை மதிக்கமாட்டார்கள்**. ஆகவே **கவுரவம் பார்க்காதபடி** கூலிவேலை செய்ய தயங்காதீர்கள்.

☐ என் **மகளும் மருமகனும் அமெரிக்காவில்** படிக்கும்போது **கல்லூரி** படிப்புக்கான பணம் கட்டிவிட்டார்கள். ஆனால் **தங்கும் வீட்டுக்கு சாப்பாட்டு செலவுக்கு** பணம் இல்லை. உடனே தயங்காமல் **கவுரவம்** பாராமல் அருகில் உள்ள KFC ஓட்டலில் **தின கூலி** வேலை செய்தார்கள். **மருமகன்** சப்ளை வேலை செய்தார். அதற்கு ஒரு மணி நேரத்துக்கு 16 அமெரிக்க டாலர்களும் **மகள்** டேபிள் துடைத்தல் போன்ற வேலை செய்ததற்கு **12 அமெரிக்க டாலர்களையும்** பெற்றார்கள். **வாரம்** இரண்டு நாள் அந்த கூலி வேலை செய்தால் **வீட்டு வாடகை,** இருவரின் **சாப்பாட்டு செலவுக்கு** போதுமானதாக இருந்தது என்று அவர்கள் கூறக்கேட்டேன். அதை கேட்ட எங்கள் மனது நொந்து போனது. ஆனால் **மகளும்** மருமகனும் அதை **கவுரவ பிரச்சனையாக** கருதவில்லை. **கர்த்தருடைய ஊழியத்தில்** மற்றவர்களிடத்தில் **கையேந்தாமல்** பெற்றோரிடம் கூட அறிவிக்காமல் **ஊழிய பயிற்சியிலேயே** சொந்தகாலில் நிற்க கர்த்தர் அவர்களை பயிற்றுவித்தார்.

கர்த்தர் **மகளையும் மருமகனையும்** ஊழிய பயிற்சி காலத்திலேயே **விசுவாசத்தில் ஜீவிப்பது** எப்படி என்பதை கர்த்தர் கற்றுக்கொடுக்க சித்தமானார். அவர்கள் வாரத்தில்செய்த



அந்த பகுதி நேர கூலி வேலையில் கிடைத்த அந்த சிறு தொகையிலும் **கர்த்தருக்கு தசமபாகம்** கொடுத்தார்கள். இந்தியாவில் **ஒரு ஏழை ஊழியருக்கு** ஒரு சிறு தொகையை மாதா மாதம் அனுப்பினார்கள். **கர்த்தர் அதை கவனித்தார்.** அவர்களின் இந்த தியாகத்தை கனப்படுத்தினார்.

**கர்த்தர் அவர்களை உயர்த்த சித்தமானார்**

1 சாமு 2:30 ல் **என்னை கனம் பண்ணுகிறவர்களை நான் கணம் பண்ணுவேன்** என்று கர்த்தர் கூறினார் என்று வாசிக்கிறோம்.

☐ **கணம்படுத்திய முதல் சம்பவம்:**

**மகளும் மருமகனும்** படித்த அந்த **ஜான்வெஸ்லி** என்ற உலக பிரசித்திபெற்ற தேவ மனிதனால் ஆரம்பித்த அந்த **ஆஸ்பரி** கல்லூரி அமைந்த இடம் மைல் கணக்கில் நீண்டு அகன்ற பிரம்மாண்டமான இடமாக இருந்தது. கல்லூரியில் இவர்கள் படிக்கும் **வகுப்பு அறையிலிருந்து** (லைப்ரரி) புத்தகங்கள் வாசிக்கும் வாசகசாலை அமைந்திருக்கும் இடம் சுமார் இரண்டு கிலோ மீட்டர் தூரம் அமைந்திருக்கும் இப்படி கல்லூரியின் படிப்பு சம்பந்தமான பல்வேறு கட்டிடங்கள் பல தூரம் சிதறி அமைந்துள்ளன. அங்கு பயிலும் **மாணவர்கள்** யாவரும் **கார்** வாகனம் வைத்துள்ளார்கள். அதில் வகுப்பு முடிந்த உடன் அடுத்த படிப்புக்கான **வகுப்புகலுள்ள கட்டிடத்துக்கு** காரில் தான் செல்வார்கள்.

ஆனால் என் **மகளுக்கும் மருமகனுக்கும்** எந்த வாகனமும் இல்லை. அதனால் ஒரு இடத்திலிருந்து மற்ற கட்டிடத்துக்கு போக இருவரும் **நடந்துதான் செல்வார்கள்**. அவ்வளவு பெரிய புல்வெளி நிறைந்த அழகான அந்த மைதானத்தில் இவர்கள் இவர் மட்டும் நடந்து போவதை எல்லாரும் பார்ப்பார்கள்.

ஒரு நாள் காலை என் **மருமகனும் மகளும்** கல்லூரிக்கு புறப்பட வீட்டிலிருந்து வெளியே இறங்கும்போது வாசல்படி அருகே ஒரு **சைக்கிள்** (மிதி வண்டி) சாய்த்து வைக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு கடிதம் சொருகி வைக்கப்பட்டிருந்தது. அதில் நீங்கள் இருவர் மட்டும் இவ்வளவு பெரிய மைதானத்தில் **கால் நடையாக** நடந்து போவதை கண்டேன். இனி இந்த சைக்கிள் உங்களுடையது இதை பயன்படுத்தி நீண்ட தூரம் உள்ள உங்கள் வகுப்புகளுக்கு சென்று வரலாம். நன்றி ! என்று எழுதியிருந்தது சைக்கிளில் மீது கைவைத்து கர்த்தருக்கு நன்றி கூறும் ஜெபம் ஏறெடுத்து அன்று முதல் இருவரும் அந்த சைக்கிளில் பல்வேறு வகுப்பு கட்டிடங்களுக்கு சென்று வந்தார்கள்.

**ஈசாக்கு வர வர விருத்தியடைந்து மகா பெரியவனானான்.** ஆதி. 26:13.

☐ **மற்றொரு ஆசீர்வாத சம்பவம்.**

மாதங்கள் கடந்தது தங்கள் படிப்பு முடியும் தருவாயில் ஒரு நாள் **கல்லூரி பிரின்சிபல்** மருமகனை தன் அலுவலகத்துக்கு அழைத்தார். அறைக்குள் நுழைந்ததும் **பிரபுசிங்** உங்களுக்கு ஒரு **பரிசு கவர்** வந்திருக்கிறது. இதில் **சில ஆயிரம் டாலர்களை** வைத்து ஒரு நபர் உங்களிடம் ஒப்படைக்க சொன்னார். தன் **பெயரை அறிவிக்க** வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார். நீங்களும் உங்கள் மனைவியும் மட்டும் கல்லூரி வளாகத்தில் சைக்கிளில் செல்வதையும் மற்ற மாணவர்கள் யாவரும் அவரவர் கார்களில் செல்லுவதையும் கண்டாராம்.

ஆகவே உங்களுக்கென்று சொந்தமாக **ஒரு கார் வாங்கிக் கொள்ள** இந்த டாலர்களை உபயோகிக்கும் படி கேட்டுக்கொண்டார். உடனே பிரின்ஸ்பல் அறையிலேயே கர்த்தருக்கே நன்றி கூறி ஜெபித்து தன் வீட்டுக்கு வந்து உடனே என் மகளையும் அழைத்துக் கொண்டு பழைய Second Hand பழைய **கார்கள் விற்கும்** மைதானத்துக்கு சென்றார்கள். அமெரிக்காவில் உள்ளவர் ஒரு **புதிய கார்** வாங்கினால் சுமார் இரண்டு வருடங்கள் மட்டுமே உபயோகித்துவிட்டு கார் கம்பெனிகள் **புதிய மாடல் கார்** விற்பனைக்கு வைத்தால் உடனே அந்த புதிய கார் வாங்கிவிட்டு இரண்டு வருடங்கள் மட்டும் உபயோகித்த தங்கள் பழைய காரை **பழைய கார்களை வாங்கி விற்கும் கம்பெனிக்கு** அனுப்பி விடுவார்கள்.

அப்படி பழைய **கார்கள் விற்கும்** இடத்துக்கு சென்றார்கள் அந்த இடம் பெரிய மைதானகளாக மைல் கணக்கில் நீண்டு இருப்பதை கண்டார்கள் அங்கு வரிசையாக **விதவிதமான கம்பெனி கார்களாக** நிறுத்திவைத்து ஒவ்வொரு காரிலும் **அதன் விலையை** அட்டையில் எழுதி **கார் முன்** வைத்திருப்பார்கள். கார் வாங்குகிறவர்கள் எல்லா கம்பெனி கார்களையும் பார்த்து தங்களுக்கு பிடித்த காரின் எண்ணெய் எடுத்துக்கொண்டு அங்குள்ள **உயர்ந்த கோபுரத்தில்** இருந்து இவர்களை கவனித்து கொண்டிருக்கும் நபரிடம் **காரின் நெம்பரையும்** அந்த காரில் குறிக்கப்பட்ட விலையை அவரிடம் கொடுப்பது அவர்களின் சட்டம்.

பிள்ளைகள் இருவரும் அந்த மைதானத்துக்குள் சென்ற உடன் அந்த கார்கள் நிறைந்த மைதானத்திற்கு சென்று ஒவ்வொரு காராக பார்த்து கொண்டே நடந்தார்கள். ஒரு குறிப்பிட்ட **பெரிய கம்பெனி கார்** இவர்களுக்கு பிடித்து விட்டது. ஆனால் அதன் மேல் எழுதப்பட்ட **காரின் விலையை** பார்த்து பயந்து **வேறு கார்களை தேடி** முடிவில் மற்றொரு காரை தெரிந்தெடுத்து அதன் நெம்பரை குறித்துக்கொண்டு விற்பனையாளரின் கோபுரத்தில் ஏறி அலுவலகத்தில் சென்று தாங்கள் தெரிந்தெடுத்த காரின் நெம்பரை கொடுத்தார்கள். அப்போது அந்த **விற்பனையாளர்** கூறினார் நீங்கள் **முதலில் பார்த்த காரை** சுற்றி சுற்றி பார்பதை நான் இங்கிருந்தவாரே கவனித்தேன். நீங்கள் முதலில் பார்த்த கார் உங்களுக்கு பிடித்துவிட்டது

என்று நினைக்கிறேன். அப்படியிருக்கு ஏன் **இந்த காரை** தெரிந்தெடுத்தீர்கள் என்று கேட்டார். அதற்கு Dr. பிரபுசிங் **எங்கள் கையில் உள்ள பணம்** மிக குறைவு, ஆகவேதான் எங்கள் கையில் உள்ள பணத்துக்கு தக்கவாறு இந்த காரை நாங்கள் தெரிந்தெடுத்தோம் என்றார்.

உடனே அந்த கார் கம்பெனி உரிமையாளர் **நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள்?** என்று கேட்டார். நாங்கள் **கிறிஸ்தவ ஊழியர்கள்** இங்கு உள்ள கல்லூரியில் பைபிள் படிக்கும் மாணவர்கள் என்ற உடன் அவர் கூறினார், அப்படியானால் நீங்கள் **முதலில் பார்த்த விலை உயர்ந்த** காரையே எடுத்துக் கொள்ளுங்கள் **கூடுதல் பணம் வேண்டாம்** எங்கள் **பரிசாக** Gift ஆக கறுதிக் கொள்ளுங்கள் என்று குறி **கார் சாவியை** கொடுத்து சந்தோஷமாக பயணம் செய்யுங்கள் என்று வாழ்த்து கூறிய உடன் இவர்களால் **கர்த்தரின் அற்புத செயலை** விவரிக்க முடியாத ஆச்சரியத்தில் ஆழ்ந்தார்கள்.

நாம் நனைப்பதற்கம் மே செய்கிறவர் கர்த்தர் என்பதை உணர்ந்தார்கள். **அமெரிக்காவில்** படிப்பு முடியும் வரை 3 வருடங்கள் விலையுயர்ந்த் அந்த காரில்தான் பயணம் செய்தார்கள். கர்த்தருடைய பிள்ளைகளை கர்த்தர் **கடல் கடந்து அந்நிய தேசத்தில்** எப்படி **படிப்படியாக உயர்த்தினார்** என்பது மட்டுமல்ல **சொந்தக்காரர்களோ நண்பர்ளோ** இல்லாத அந்த **அயல் நாட்டில்** கர்த்தர் **தன்னை நம்பிய பிள்ளைகளை** எப்படியெல்லாம் **உயர்த்தி** மேன்மைபடுத்தியிருக்கிறார். மேலும் 3 ஆண்டு படிப்பை ஒரு வருடத்திலேயே முடித்து அதிக மார்க்கோடு வெற்றி பெற்றதால் அந்த கல்லூரி பிரின்சியால் மருமகன் பிரபுசிங் அவர்களிடம் டாக்டர் **Ph.D. பட்டம் பெரும் படிப்பை** படிக்க அந்த கல்லூரியே நாங்களே Sponser செய்து உதவியது. அந்த கல்லூரி **பணத்திலேயே** டாக்டர் படிப்பை மிகவும் வெற்றிகரமாக முடித்து இந்தியா திரும்பினார்கள்.

இவர் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போதே இவருக்கு **பிரசங்கம் செய்யும்** தாலந்தை கர்த்தர் கிருபையாக தந்ததால் **அமெரிக்க வெள்ளைகாரர்** சபைகளில் இவரை **கன்வென்ஷனில்** பிரசங்கிக்க கர்த்தர் ஏராளமான வாசல்ளை திறந்தார். இன்றைய நிலையில் Dr. **தியோடர் வில்லியம்** Dr. **சாம் கமலேசன்** ஆகிய இவர்களுக்கு பிறகு அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் **கன்வென்ஷன்களில்** பிரசங்கிக்க அடிக்கடி அழைக்கப்படுகிறார் என்பது இந்திய கிறிஸ்தவர்களாகிய நமக்கு கேட்க சந்தோஷமாக இருக்கிறது. இப்போது **இந்தியாவில் பெங்களூரில்** பிரசித்திபெற்ற SAIACS சயாக்ஸ் என்ற **கல்லூரியின் பிரின்ஸ்பாலாகவும்** அமெரிக்காவில் தான் படித்த (ஜான் வெஸ்ஸியின்) **ஆஸ்பரி** கல்லூரியில் போர்டு **மெம்பராகவும்** பெருப்பேற்று ஊழியத்தை என் மகளும் மருமகனும் தொடருகிறார்கள். கர்த்தருக்க மகிமை உண்டாவதாக.

☐ இந்த கட்டுரையின் தலைப்பில் நீங்கள் வாசிப்பதைபோல **கர்த்தருடைய**

**வாக்குதத்தை எப்படி நாம் உரிமையாக்கி கொள்வது** என்பதை **ஈசாக்கின்** வாழ்க்கையில் நடந்த சம்பவத்தை போல **பஞ்ஜம் ஏற்பட்ட** நாட்டிலேயே அவனுக்கு **பெலிஸ்தர்** மூலமாக பலவித தொல்லைகள் ஏற்பட்டாலும் **பஞ்ஜத்துக்கு** பயந்து தன் தகப்பனார் ஆண்டவர் வெறுக்கும் நாடுகளுக்கு சென்றதை போல போகாமல் நீ **இந்த நாட்டிலேயே** இரு வேறு எங்கும் உணவுதேடி போகாதே என்ற கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்படிந்தான்.

ஈசாக்கின் **வீட்டில் உள்ளவர்கள் வேலைக்காரர்கள்** சோர்ந்து போன வேளையிலும் **பஞ்ஜம் ஏற்பட்ட தேசத்திலேயே** கர்த்தர் என்னையும் என் வீட்டாரையும் **பட்டினியில் கிடத்தாமல் போஷிக்க வல்லவர்** என்பதை ஈசாக்கு நம்பினான். அந்த **வறண்ட தண்ணிரற்ற** பூமியில் **விதை விதைத்தான்** வெகு சீக்கிரத்தில் அது வளர்ந்து **பல நூறு மடங்கு** அந்த பஞ்ஜ காலத்திலேயே **பலன் தந்தது**. ஈசாக்கு கர்த்தருக்கு கீழ்படிந்ததினால் அவனும் அவன் குடும்பத்தினரும் வேலைக்காரரும் போஷிக்கப்பட்டு காப்பாறறப்பட்டார்கள். **சத்துருக்குள்** இவன் வளர்ச்சியை பார்த்து **பொறாமை கொள்ளும் அளவு ஈசாக்கு வரவர விருத்தியடைந்தான்.**

☐ இந்த சரித்திரத்தில் என்னை கவர்ந்த ஒரு வார்த்தை என்னவென்றால் ஈசாக்கை பகைத்து போகுமிடமெல்லாம் தொல்லை கொடுத்து ஈசாக்கை விரட்டியடித்தவர்கள் எல்லாம் ஈசாக்கிடம் கூடிவந்தார்கள்.

அப்போது ஈசாக்கு நான்தான் உங்கள் எல்லையை விட்டு வந்துவிட்டேனே! மறுபடியும் என்னை தொல்லைபடுத்தவா? மறுபடியும் வந்தீர்கள் என்றான். அதற்கு அந்த பகைவர்கள் **ஈசாக்கை** நோக்கி நாங்கள் இத்தனை தொல்லை கொடுத்து போகுமிடமெல்லாம் உங்களை தூரத்தி வேதனைபடுத்தினாலும் **நீங்களோ வரவர விருத்தியடைந்து** எங்கள் எல்லாரை காட்டிலும் மிகப் பெரிய **செல்வந்தனாகி** பெரும் பணக்காரனாக இருக்கிறீர்கள் என்று கூறி **நிச்சயமாக கர்த்தர் உம்மோடே கூட இருக்கிறார்** என்று **நாங்கள் கண்டோம்** என்றார்கள். ஆதி. 26:28

**பகைவரால்** ஈசாக்கு புகழப்படுகிறார், மட்டுமல்ல **ஈசாக்கோடு கர்த்தர் இருக்கிறார்** என்பதையும் அவர்கள் **கண்டார்கள்** என்பது பெரிய விஷயம்.

நம் உறவினர்களால் நண்பர்களால் நாம் வேலைசெய்யும் இடத்தில் உள்ளவர்களால் நாம் **புகழப்படுவது** என்பது பெரிய காரியம் அல்ல. **பகைவரால் நம்மை வெருப்பவர்களால்** நாம் புகழப்பட வேண்டுமானால் **நம்மில் நம் தெய்வத்தை பகைவர்கள்** பொறாமை பிடித்தவர்கள் **காணவேண்டும்** எப்படி அவர்கள் அதை புரிந்து கொண்டார்கள்?

**ஈசாக்கின்** தகப்பன் வெட்டிய கிணரை பகைவர்கள் **மூடிப்போட்டார்கள்,** அங்கிருந்து வேறு இடம் சென்று **ஈசாக்கு** புதிய கிணறு தோண்டினான். அதையும் அநியாயமாக மூடி இந்த கிணறு **எங்களுடையது** என்று அநியாயமாக **வாக்குவாதம்** செய்து அந்த கிணரையும்

**பகைவர்கள் மூடிப்போட்டார்கள். ஈசாக்கு இவர்களை எதிர்க்கவில்லை** தன் வேலைக்காரர்களையும் **வாக்குவாதம் செய்யவிடாமல் அடக்கி வைத்தான்.** இந்த **குணாதிசயம்** பகைவரை ஆச்சரியப்பட வைத்தது.

**நம் நாட்டில் ஒரு பழமொழி கூறுவார்கள் மற்றவன் நம்மை தலையில் கொட்ட கொட்ட குனிந்து கொடுப்பது எதிரிக்கு இளக்காரமாகும் என்பார்கள்.**

ஆனால் ஈசாக்கின் அமைதியும், தாழ்மையும், கர்த்தர்மேல் வைத்த பலமான விசுவாசமும்தான் **அவனை மேலும் மேலும் உயர்தியது.** இதில் ஈசாக்கின் தெய்வத்தை நம் மூலமாக **பகைவர்கள் கண்டு** அவர்கள் வாயாலேயே கர்த்தர் புகழ வைக்க காரணமானது.

கர்த்தருடைய **வாக்குத்தத்தம்,** கர்த்தருடைய வசனத்திற்கும், கர்த்தருக்கும் **கீழ்படிந்து நடப்பவர்க்கு** அந்த **வாக்குத்தத்த வசனம் ஆசீர்வாதமாக அமையும்.**

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்

☐ **நானே தேவன் என்பதற்கு நீங்கள் எனக்கு சாட்சிகள்,** ஏசா 43:12

# மரண அறிவிப்பு



பெங்களூர் தொழிலதிபர் **சகோ. பாலகிருஷ்ணன்** அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். சில காலம் வியாதி படுக்கையில் இருந்து சிகிச்சை பலனற்று இறந்துபோனார்.

சகோதரன் அவர்கள் மிஷனரி பணிக்காகவும், மிஷனரிகளுக்காகவும் ஏராளமான காணிக்கை கொடுத்தார். FMPB போன்ற **பல மஷனரி** ஸ்தாபனங்களை தாங்கி **வட இந்தியாவில்** மிஷனரி **ஆலயமும்** கட்டிகொடுக்க உதவி செய்தவர்.

இவர் குடும்பம் முழுவதும் என்னையும், என் ஊழியத்தையும் மகவும் நேசிப்பவர்கள். ஒவ்வொரு மாதமும் என் ஊழியத்தை காணிக்கைகளினால் தாங்கி வந்தார். பெங்களூரில் என் ஊழியம் எந்த இடத்தில் நடந்தாலும் அங்கு வந்து ஜெபித்து செல்வார். இவர் மரணத்தால் துக்கம் அனுபவிக்கும் இவர் மனைவி, மகள் **ஏஞ்சல்** மருமகன் பேத்தி இவர்களுக்கு கர்த்தர் ஆறுதல் தருவாராக.

சகோதரன் பாலகிரிஷ்ணனின் மிஷனரி ஊழிய பாரத்துக்காக தேவனை துதிக்கிறேன்.

# அர்த்தமுள்ள வாழ்க்கை

திரு. **பெர்னாட்சா**, சென்னை

சென்னை பல்கலைக் கழகத்தில் எனது படிப்பை முடித்துவிட்டு ஊருக்கு திரும்பிக் கொண்டிருந்தேன். வேலூர் பேருந்து நிலையத்தில் எனது கிராமப் பேருந்துக்காக காத்திருந்தபோதுதான் அந்த நெஞ்சைக் கலங்க வைக்கும் சம்பவம் நடந்தேறியது.

அது ஒரு மாலை வேளை, இருபது வயதை மட்டுமே கடந்த ஒரு தம்பதியினர் Big Shoper) குச்சிப் பைகளோடு வந்து எனக்கு முன்பாக நின்றனர். அந்த அக்கா இடுப்பில் பிள்ளையை வைத்துக்கொண்டு குழந்தையுடன் வந்திருந்தார். **ஏழைக் குடும்பம்** அது. அவர்களின் உடைகளை கண்ட போதும் **கலைந்த** கூந்தலிலும் கானும்போது புரிந்தது. சிறிது நேரத்தில் அத் தம்பதிகள் ஏதோ வாக்கு வாதம் நடக்க அந்த அக்காவை கொடூர வார்த்தைகளால் திட்டிவிட்டு அவர் **கணவன்** மனைவியை அங்கேயே விட்டுவிட்டு நடையை கட்டிவிட்டான். இப்போது **கலங்கிய** கண்களோடு அந்த அக்கா **இரு பிள்ளைகளோடு** பேருந்து நிலையத்தில் நின்றுகொண்டு **ஊருக்குச் செல்லவும், உண்ணவும்கூட** பணமில்லை என்பதை அறிய முடிந்தது.

நாங்கள் பஸ்சிற்காக நின்றுகொண்டிருக்கும் இடத்தின் வெகு அருகிலேயே தரையில் துணியை விரித்துப் **பழக்கடை** ஒன்றை நடத்திக் கொண்டிருந்த ஏழை **பெண்மணி ஒருவரும்** கணவன் –மனைவியை ஏசுவதையும் அந்த தம்பதியினர் கோப வார்த்தையும் கேட்டபோது அதன்பின் **நடந்தவற்றைக்** கவனிக்கலானார். கணவன் கோபித்துக்கொண்டு மனைவியையும், குழந்தையையும் அப்படியே விட்டு விட்டு போனபின் அவர் சென்று பிள்ளைகளின் தாயிடம் பிரச்சனை என்னவென்று கேட்க அந்த பெண் கூறினார் என் கனவரின் தொடர்ந்த அந்த காதலில் தொடங்கிய உறவு முதல் இன்று கதிகலங்கி நிற்கும் நிலை வரை துக்கத்தோடு தன் கதையை சொல்லி முடித்தார்.

குழந்தைகளும் அவளும் காலை முதலே சாப்பிடாததை அறிந்த **பழக்கடை அக்காவின்** வாய் பரிதாபத்தோடு திறந்தது. வேகமாகக் சென்று இரண்டு தோசை பொட்டலங்களை வாங்கி வந்து அந்தக் **குழந்தைகளுக்கு தோசையை உண்ணக்** கொடுத்தார் அந்த பழக்கடை அக்கா!. அந்த குழந்தைகள் **பசியில்** பரபரப்பாகத் தின்றதை கண்டு தாயின் உள்ளம் கண்ணீரைக் கக்கியது. அதைக்கண்ட நானும் கண் கலங்கினேன். கவனியுங்கள். அந்த தாய்க்கு **பழக்கடை அக்காவின்** செயல் எவ்வளவு அர்த்தமுள்ளதாய் இருந்திருக்கும்.

**பழக்கடை அக்காவும்** ஏழைதானே. அந்த தாயும் பிள்ளைகளும் ஏழைதானே!. இருவரும் முன் பின் சந்தித்ததில்லை. எனினும் அறியாத அவர்களின் மீது கரிசனை கொண்ட

அந்த **பழக்கடை அக்காவின்** இறக்க உள்ளம் பெரிது. இத்தனைக்கும் அந்த கடைக்கார அக்கா ஆண்டவரை அறியாதவர் என்பது குறிபிடத்தக்கது/

ஆண்டவரை அறியாத அன்றாடம் காய்ச்சியாக வாழும் மக்கள் கூட அப்படிப்பட்ட சாட்சியான வாழ்வை ஏறெடுக்கும்போது அன்பே உருவான ஆண்டவரை அறிந்த நம்முடைய வாழ்க்கை எவ்வளவு அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும்!

## கனி கொடுக்கிற வாழ்க்கை

**எல்லா மனிதராலும்** கனி கொடுக்க முடியும். ஆனால் அது **எத்தகைய கனி** என்பதில்தான் அர்த்தம் இருக்கிறது. கர்த்தருக்குள் நிலைத்திராதவர்கள். **கனி கொடுத்தாலும்** அந்த கனி எட்டியைப்போல **கசக்கும்மெனில்** யாருக்கு லாபம்? நாம் நிலைத்திருப்பது எத்தகைய **கொடியில்** என்பதை ஒவ்வொரு முறையும் உணரவேண்டும். **திராட்சைக்கொடியில்** நிலைத்திருப்போமானால் **ருசியுள்ள திராட்சை கனி** கிடைக்கும். **எட்டி மரக்கிளையிலே** நிலைத்திருந்தால் என்ன கிடைக்கும்? ஆகவே நாம் எங்கே எதில் வேர்கொண்டு நிலைத்திருக்கிறோம் என்பது தான் முக்கியம். ஆகவேதான் இயேசு **நானே திராட்சை செடி** என்னில் நிலைத்திருக்கிறவன் **கனி** கொடுப்பான் என்கிறார்.

இதன்படி இயேசுவில் நிலைத்திருக்கிறவன் சுவையான கனிகளை கொடுக்கமுடியும் என்பதை அறிகிறோம்.

### அர்த்தமுள்ள வாழ்க்கை என்றால் என்ன ?

**அர்த்தமுள்ள வாழ்க்கை** என்பது **சுயத்திற்காக** வாழும் வாழ்க்கை அல்ல. அ**து பிறருக்காக** வாழப்படுவது. ஒரு அழகான பாடல் வரி கூட **சீஷன்** என்பவன் **குருவைப் போலவே** தனக்காய் வாழாமல் **தன்னையும் தருவானே**, என்று கூறுகிறது. நமது குருவாகிய இயேசுவும் **இராஜாவா**க இருந்த போதிலும் நமக்காக தன் நிலையை **தாழ்த்தினாரே,** அவரைக்காட்டிலும் நாம் உயர்ந்தவரோ? ஒரு **கனியை** நாம் ஒருவரே **தன்னந்தனிமையில் உண்பதை** காட்டிலும் பலரோடு பகிர்ந்து உண்ணும்போது அது இன்னும் **சுவையாக** மாறுகிறது. நமக்கும் சுவை அதை பகிர்ந்துகொண்டோருக்கும் சுவை . நம்முடைய அறிவோ, தாலந்தோ பணமோ, கல்வியோ யாருக்கும் பயன்படவில்லையெனில் அதைக் கற்று பெற்று என்ன பிரயோஜனம். உயரிய கருத்துக்களை உடைய புத்தகத்தை வாங்கி **அலமாரியில் பூட்டி வைத்தால்** அது யாருக்கு பிரயோஜனம்? நாம் இப்படிப்பட்டவர்களாகச் செயல்படுவோ மானால் நம்முடைய வாழ்க்கை அர்த்தமுள்ளதாக இருக்குமா ?

## அர்த்தமுள்ள வாழ்கை வாழ்தல்

**கனிகளைக் கொடுக்காமல்** பயனுள்ள வாழ்க்கை வாழ இயலாது. அப்படிக் கனிகளை கொடுத்தாலும் **அது மற்றவர்களுடைய வாழ்கையைச் சுவையாக** மாற்றக்கூடியதாக

இருக்க வேண்டும். நாம் மிகுந்த சுவையான **கனிகளைக்** கொடுக்கும்போது **தேவனுடைய வெளிச்சமாக** இருக்கிறோம். அந்த வெளிச்சம் நம்முடைய வாழ்கை மட்டுமன்றி மற்றவர்களுடைய வாழ்க்கையும் **வெளிச்சமாக்க வேண்டும். அந்த வெளிச்சம்** அவர்களுடைய வாழ்க்கையிலும் அவர்கள் சுவையான **கனிகளைக்** கொடுப்பதற்கு வழிநடத்த வேண்டும். அதை ஆண்டவரிடத்தில் கேட்போம். நமக்கு இந்த உலகில் கொடக்கப்பட்டுள்ள இந்த ஒருவாழ்க்கையை அவருக்காக அர்த்தமுள்ளதாக வாழ்ந்து மற்றவர் வாழ்க்கையையும் அர்த்தமுள்ளதாக மாற்றத்தானே அழைக்கப்பட்டிருக்கிறோம்!

அழைப்புக்கு நாம் செவி கொடுக்கத் தயாராக உள்ளோமா?

கிரேக்க கதையொன்றில் **சிசிபஸ்** என்பவன் ஒரு குன்றின் மீது ஒரு பெரிய கல்லை உருட்டிச் செல்வதற்காக கட்டளைவந்தது. அவன் அந்த வலுவான கல்லை குன்றின்மீது போராடி எடுத்துக்செல்கிறான். குன்றில் உச்சிக்கு போனவுடன் அது அங்கு நிற்காமல் மறுபடியும் கீழே உருண்டு வருகிறது. மீண்டுமாக கல்லைக் குன்றின்மீது எடுத்துச் செல்கிறான். மீண்டும் அந்தக்கல் கீழே உருண்டு விழுகிறது. இப்படி தன்னுடைய வாழ்க்கை முழுவதும் அவன் அந்தக் கல்லை மேலே எடுத்துச்செல்வதற்கும் கீழே உருண்டு வந்தபின் மீண்டும் எடுத்துச்செல்வதற்குமே செலவழித்துக் கொண்டிரந்தான். அது அவனுக்கு பயனில்லை, **எவருக்கும் பயனில்லை.** ஆற்றலும் நேரமும் வீணாவதுதானே மிச்சம். இன்று நம்மில் பலரது வாழ்க்கையும் இப்படித்தான் சிக்கிக்கொண்டிருக்கிறது.

**ஆஸ்திரேலியாவிலிருந்து** வந்து **ஒடிசாவில்** குஷ்டரோக மக்களுக்காகத் தன்னுடைய வாழ்க்கையை செலவழித்து பின்னர் அப்பகுதி மக்களுக்குள் வாழ்ந்த **சிலராலே** கொல்லப்பட்ட **கிரகாம் ஸ்டேயின்ஸ்** எங்கே? இருக்கும் இடத்திலேயே **சவுகரியமான** வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் எங்கே? என்ன செய்யப்போகிறோம்? **அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ** தேவ சமூகத்தில் நம்மை அற்பணிப்போமா?


## ONLINE BANKING (NEFT)

**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**

SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**

SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

# பாடல் பிறந்த கதை...

## பாதை தெரியாத ஆட்டைப்போல

பாதை தெரியாத ஆட்டைப்போல
அலைந்தேன் உலகிலே
நல்ல நேசராக வந்து
என்னை மீட்டிரே

கலங்கினேன் நீர் என்னைக் கண்டீர்
பதறினேன், நீர் என்னைப் பார்த்தீர்
நம்பிக்கையோடே நீ வந்தால்
துணையாக இருப்பேன் என்றீர் – பாதை

என் காயம் பார்த்திடு என்றீர்
உன் காயம் ஆறிடும் என்றீர்
நம்பிக்கையோடே நீ வந்தால்
துணையாக இருப்பேனே என்றீர் – பாதை

இந்த உறுக்கமான பாடலை எழுதியவர் அருள்திரு. **அறிவர் மோகன்ராஜ் பீட்டர்** ஆவார். இவர் 3-9-1949 அன்று **ஆனைமலை**ப்பகுதியிலுள்ள **வால்பாறை** தேயிலைத் தோட்டப் பகுதியில் வாழ்ந்த கனகராஜ்-ரஞ்சிதம் தம்பதியருக்கு ஐந்தாவது மகனாய் பிறந்தார். வால்பாறையிலுள்ள உயர்நிலைப்பள்ளியில் படித்தார். அப்போது தன்னை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தார். பின்னர் 1970 வரை தமிழ்நாடு மின்சார வாரியத்தில் எழுத்தராகப் பணியாற்றினார். திடீரென கிளைக்கோமா **கண் வியாதியினால்** கண்பார்வை **முற்றிலும் இழந்தார்.** மருத்துவ சிகிச்சைகள் பலன் அளிக்கவில்லை. வேலை **இழந்தார்.** வாழ்வே இல்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டார், துன்புற்றார். சமய சமூக எதிர் கருத்துக்கள் அவரைத் தாக்கின. ஆனால் திருமறையில் கடவுளுடைய வார்த்தை அவருக்கு உந்துதல் தந்தது. சங்கீதம் 32:8ம் வசனம் இவருக்குள் நம்பிக்கை ஊட்டிய கடவுளுடைய வார்த்தையாகும். கடவுளுடைய சத்தத்திற்கும் செயல்பாட்டிற்கும் தன்னை ஒப்புக்கொடுத்தார். கடவுள் செயல்படத் தொடங்கினார்.

இவர் தன்வாலிப காலத்தில் திருச்சி **பிஷப் ஹீபர்** கல்லூரியில் PUC, B.A., படித்தார். மாணவர்கள் மத்தியில் **நற்செய்தியாளராக** விளங்கினார்.முழுநேர ஊழியத்திற்குத் தன்னை ஒப்புக்கொடுத்தார். **திருச்சி-தஞ்சை** திருமண்டல ஆதரவுடன் **மதுரை தமிழ்நாடு இறையியல் கல்லூரியில்** M.A.,B.D., படித்தார். 1980 முதல் திருச்சி – தஞ்சை திருமண்டலத்தில் **போதகராகப்** பணியாற்றினார். அப்பொழுது திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் **மேய்யியல்** துறையில்

**அறிவர்** பட்டம் பெற்றார். 1988 முதல் மதுரை தமிழ்நாடு இறையியல் கல்லூரியில் சமயத்துறையில் **பேராசிரியராகப்** பணியாற்றி வந்தார். அத்துடன் திருப்பணி சார்ந்த பொறுப்புகளையும் மேற்கொண்டு வந்தார்.

தன்வாழ்வில் தான்பெற்ற இறையொளியினைப் பிறரும் பெறவேண்டும் என்ற ஒப்படைப்புடன் **எப்பத்தா மிஷன்** என்ற நிறுவனத்தை ஆரம்பத்த **மோகன்ராஜ் பீட்டர்,** தமிழ்நாடு இறையியல் கல்லூரியின் ஆதரவுடன் ஏழைகள். உடல் ஊனமுற்றோர் நலன் காக்க பாடுபட்டார். **ஒளியகம்** என்ற **பார்வையற்றோருக்கான இல்லத்தை** நடத்தி வந்த அவர் தென் இந்தியத் திருச்சபை, லூத்தரன் திருச்சபை மற்றும் பல சபைகளில் நற்செய்திக் கூட்டங்கள் நடத்தி வருகிறார். **இங்கிலாந்து** நாட்டில் உள்ள இறையியல் கல்லூரிகளுக்ககு திருச்சபைகளுக்கும் **இலங்கையில்** உள்ள திருச்சபைகளுக்கும் சென்று ஊழியம் செய்து வந்தார்.

சிறு வயதிலேயே இசையில் விருப்பம் கொண்ட அவர் ஆர்மோனியம் அக்கார்டியன் மற்றும் கீபோர்டு வாசிப்பதில் தேற்ச்சி பெற்று விளங்கிய அவர் பல பாடல்களை எழுதி அவற்றின் இராகத்தையும் அமைக்கும் தாலந்தை ஆண்டவர் அவருக்கு அளித்ததோடு, பாடல்களைப் பாடக்கூடிய நல்ல குரல் வளத்தையும் பெற்றிருந்தார். சுமார் 50 பாடல்களுக்கு மேலாக எழுதி அவற்றிற்கு இராகம் மற்றும் பின்ணனி இசை அமைத்திருக்கிறார். **பாதைக்குத் தீபம்** எல்லாருக்கும் இயேசு என்ற இரு ஒலி நாடாக்களை வெளியிட்டுள்ள இவர் **விஷ்வவாணி ஃபீபா** நிறுவனங்களின் **வானொலி நிகழ்ச்சிகளிலும்** பங்குபெற்றுள்ளார்.

**தம் வாழ்கையின் அனுபவங்களையே** பாடலாக மாற்றியுள்ள அவர் இயற்றிய **பாதை தெரியாத ஆட்டைப்போல** என்ற இந்தப் பாடல் **தம் சொந்த வாழ்வில் பார்வை இழந்து நம்பிக்கை குன்றி** இனி எப்படி வாழ்வது? என்று கலங்கி நின்ற வேளையில் எழுந்த பாடல். இப்பாடலை கோட்போர் தங்கள் ஆவியில் உற்சாகமடைவர். **ஆண்டவரைவிட்டுத்** தூர விலகிச்சென்று **பாதை தெரியாது** நிற்போரை இப்பாடல் **தேவனோடு** மீண்டும் **உறவுகொள்ள** அழைக்கின்றது.

**கடவுள் நம்மைப் படைத்தவர்.** அவருடைய **அன்பை** இயேசுவில் **விளங்கப்பண்ணினார்.** வாழ்வில் **வழி தெரியாமல்** நிற்போருக்கு **வழியாக. வாழ்வாக** வாய்மையாக இருக்கிறார். **தந்தை**யன்பையும் **தாயன்பையும்** நம்மேல் பொழிந்தருள்கிறார். தனி மனிதனுக்கும் ஏழைகள், அனாதைகள், கைவிடப்பட்டோர் ஒடுக்கப்பட்டோர், துன்புறுவோர் அனைவருக்கும் வடுதலை தருகிறார். **கலங்கி நிற்பவர்** பதறிபோனவர் அனைவருக்கும் **ஆண்டவராக அருகில் இருக்கின்றார்.**

அவர் துன்புறும் மக்களோடு துன்புகிறவர் என்பதைச் சிலுவையில் துன்புறும் இயேசுவாக காயங்களைக் கட்டுகிற இயேசுவாகக் காணலாம். இயேசுவினிடத்தில் நம்பிக்கை கொள்ளவேண்டும். வாழ்வில் இறைவனின் சித்தத்தையும் செயல்பாட்டையும் உணரலாம் என்ற கருத்துக்களைத் தம் முடைய பாடலல்களில் கூறி உள்ளொளி பெற நம் அனைவரையும் அழைக்கும் பார்வையற்ற இவரின் சவாலான சாட்சி உள்ள வாழ்வு நம்மை நம்பிக்கைக்கு நேராக வழி நடத்துகிறது.

## ஜாமக்காரன் பெயரில் பொய்யான Youtube

ஜாமக்காரன் பெயரில் திருட்டு Youtube பை ஒரு நபர் சில காலமாக வெளியிட்டுக்கொண்டு வருகிறார். அனைத்து ஊழியர்களையும் மிகமோசமான வார்த்தைகளை உபயோகித்து அசிங்கப்படுத்துகிறார். அவர் தன்னுடைய Youtube உபயோகிக்க என் பத்திரிகை பெயரை சூட்டி அதை மிக தவறான காரியத்துக்கு உபயோகிக்கிறார். ஏற்கனவே என் **ஜாமக்காரனில்** அந்த தவறான **Youtube**க்கும் **ஜாமக்காரன் பத்திரிக்கைக்கும்** எந்த வித தொடர்பும் **சம்பந்தமும் இல்லை என்பதை பலமுறை அறிவித்துவிட்டேன்.** அவர் வார்த்தை கேட்டாலே அவர் **இரட்சிக்கப்படாத நபர்** என்று விளங்கும். **பல ஊழியர்களை பிளாக்மெயில்** செய்து **மிரட்டுகிறார்** என்று கேள்விப்பட்டேன். அந்த Youtubeஐ **வெளியிடும் நபரை** யாராவது **கண்டுபிடித்தால்** அவர் **பெயர்** அவர் **தொலைபேசி எண்** ஆகியவற்றை கண்டுபடித்து சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே நான் **ஜாமக்காரன்** பத்திரிகையில் குறிப்பிட்டதுபோல எனக்கு **Youtube, Whatapp** எதுவும் இல்லை என்பதை அறியுங்கள.

**JULY 2022**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.